605 / 3

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

Q1 ________________ உணவு இல்லாமலேயே பல மாதங்கள் வாழ முடியும்.

(1) தேள்களில்
(2) தேள்களால்
(3) தேள்களுக்கு
(4) தேள்களுடன்

Q2 சண்டையிட்டுக் களைத்துப்போன சிங்கமும் காட்டுப்பன்றியும் வெவ்வேறு ________________ திரும்பிச் சென்றன.

(1) திசைகளில்
(2) திசைகளின்
(3) திசைகளோடு
(4) திசைகளிலிருந்து

Q3 "என் பள்ளிப்பையைத் திறந்தது யார்?" என்று கோபத்துடன் குமார் தன் ____________ பார்த்துக் கேட்டான்.

(1) தம்பியுடன்
(2) தம்பியிடம்
(3) தம்பியை
(4) தம்பியிடமிருந்து

Q4 நாம் ஈரச்சந்தையில் வாங்கும் சில காய்கறிகள் ________________ இறக்குமதி செய்யப்படுகின்றன.

(1) வெளிநாட்டில்
(2) வெளிநாட்டுக்கு
(3) வெளிநாட்டுடன்
(4) வெளிநாட்டிலிருந்து



More papers at www.testpapersfree.com

Q5 கவனக்குறைவாக இருந்ததால் மாலா ________________ பணப்பையைத் தொலைத்துவிட்டாள்.

(1) தனது
(2) தனக்கு
(3) தன்னை
(4) தன்னோடு



More papers at www.testpapersfree.com

## A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q6 ஒப்புரவு ____________

(1) பழகு
(2) ஒழுகு
(3) விரும்பு
(4) தொடங்கு

Q7 இளமையில் கல்வி ____________ எழுத்து.

(1) கல்லில்
(2) மனத்தில்
(3) சிலையில்
(4) முதுமையில்

Q8 ____________ அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

(1) மந்திரிக்கு
(2) வறிஞர்க்கு
(3) கவிஞர்க்கு
(4) அறிஞர்க்கு

Q9 தன்னைத்தான் காக்கின் ____________ காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

(1) சினங்காக்க
(2) மனங்காக்க
(3) நாகாக்க
(4) சொல்காக்க

Q10 அழுக்காறு அவாவெகுளி ____________ நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

(1) கடுஞ்சொல்
(2) அருஞ்சொல்
(3) இன்னாச்சொல்
(4) பொல்லாச்சொல்



More papers at www.testpapersfree.com

**<u>A3 அடைமொழி/எச்சம்</u>**

**Q11 முதல் Q15 வரையுள்ள <u>அடைமொழி/எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

Q11 ஏழை விவசாயி தன் நாயை ______________ பராமரித்து வந்தான்.

(1) பரிவான
(2) அன்பாக
(3) வசதியாக
(4) மகிழ்ச்சியான

Q12 மதியழகன் ________________செயல்பட்டுச் சாலை விபத்தில் சிக்கிய மாறனைக் காப்பாற்றினான்.

(1) துரிதமாக
(2) தாமதமான
(3) பதற்றமாகி
(4) அடக்கமாக

Q13 சோமு தன் தோட்டத்தில் ______________ காய்கறிகளைச் சந்தையில் விற்றான்.

(1) பூத்த
(2) காய்ந்த
(3) வளர்ந்து
(4) விளைந்த

Q14 குளத்தில் ______________ தண்ணீரைக் கண்ட அரசன் அதை அள்ளிப் பருகினான்.

(1) உயர்வான
(2) தெளிவான
(3) மங்கலான
(4) கலங்கலான

Q15 கவிதா தன் சந்தேகத்தை ______________ ஆசிரியரை அணுகினாள்.

(1) மாற்றி
(2) கழிக்க
(3) களைய
(4) போக்கி



More papers at www.testpapersfree.com

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

"குருவே, எனக்கு எப்போதும் கவலையாக இருக்கிறது. வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இல்லை," என்றான் சீடன். Q16______________ நிமிர்ந்து பார்த்தார் குரு. "உனக்கு என்ன வேண்டும்?" என்றார். "மகிழ்ச்சி வேண்டும். உலகில் எல்லாரும் என்னைவிட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்," என்றான். "என்னுடன் வா," என்று அவனைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார் குரு. அங்கே மரங்கள் யாவும் Q17______________, பசுமையாய் பூத்துக் குலுங்கின.

"இந்த மரம், செடிகளைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டார் குரு. அதற்குச் சீடன் அவை தன்னைவிட மகிழ்ச்சியாக Q18______________ தோன்றுகிறது என்று சொன்னான். "வேறு ஏதாவது புலம்பல் சத்தம் அவற்றிடமிருந்து கேட்கிறதா?" என்று குரு கேட்டார். சீடனுக்கு ஒன்றும் Q19______________ விழித்தான். "இந்த மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. இருப்பினும், அவை ஒருநாளும் Q20______________ பார்த்து வருந்துவதில்லை. அதுதான் அவற்றின் மகிழ்ச்சிக்கும் பசுமைக்கும் காரணம். அவரவர் வாழ்க்கை அவரவர்க்கே. இது புரிந்தால் உலகம் இனிக்கும்" என்றார் குரு.

Q16
(1) கேட்டவனை
(2) பிதற்றியவனை
(3) சொன்னவனை
(4) செவியுற்றவனை

Q17
(1) காய்ந்து
(2) செழித்து
(3) வளைந்து
(4) முளைத்து



More papers at www.testpapersfree.com

Q18 (1) வருவதுபோல்
(2) வாழ்வதுபோல்
(3) இருப்பதுபோல்
(4) காண்பதுபோல்

Q19 (1) புரியாமல்
(2) தேடாமல்
(3) கவனிக்காமல்
(4) கொடுக்காமல்

Q20 (1) வேறுபடுத்தி
(2) மாறுபட்டு
(3) சமப்படுத்தி
(4) ஒப்பிட்டு



More papers at www.testpapersfree.com

## B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் துணி வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பணக்காரன்; அதே சமயம் மகா கஞ்சன். ஒருநாள், அவன் தன்னிடம் உள்ள துணிகளை விற்பனை செய்வதற்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்து, நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஓர் ஒட்டகத்தின் முதுகில் ஏற்றினான். பின், வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான்.

செல்லும் வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்துவிட்டது. வியாபாரி தன் வேலைக்காரர்களைப் பார்த்து, "நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு, சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாதபோது நீங்கள் கவனமாக இருக்கவேண்டும். ஒருவேளை நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டியை நனையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்திருந்தும் குறைந்த சம்பளம் கொடுத்து வேலைக்கு <u>**அமர்த்தியிருந்தான்**</u> வணிகன். வியாபாரி பக்கத்து ஊருக்குச் சென்ற கொஞ்ச நேரத்தில் வானில் மேகமூட்டம் தென்பட்டது. ஒட்டகம் படுத்துக் கிடந்தது. வேலைக்காரர்கள் இருவரும் வானத்தை அண்ணாந்து பார்த்து, மழை வரும்போல் தெரிகிறதே என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

சிறிது நேரத்தில், மழை பெய்யத் தொடங்கியது. "நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக்கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது என்று கேட்டான் ஒருவன். "பெட்டிகளுக்குள்ளே இருக்கின்ற துணிகளையெல்லாம் எடுத்துப் பெட்டிகளின் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகளை நனையாமல் பார்த்துக்கொள்வோம்," என்றான் அடுத்தவன். இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளின்மேல் போர்த்தினர். மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாயின.

ஒட்டகத்துடன் திரும்பி வந்த வணிகன், இந்தக் காட்சியைக் கண்டு, "ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து போய்விட்டனவே!" என்று கோபத்துடன் கத்தினான். அவர்களில் ஒருவன், "முதலாளி! நீங்கள் எங்கள்மீது கோபப்படாதீர்கள். நீங்கள் சொன்னபடி பெட்டிகளை நனையாமல் பார்த்துக்கொள்ளவே துணிகளை எடுத்து பெட்டிகளின்மீது போட்டோம். பெட்டிகள் சிறிதுகூட நனையவில்லை, பாருங்கள்!" என்றான்.
முட்டாள்களை வேலைக்கு வைத்தது தன்னுடைய தவறுதான் என்பதை உணர்ந்தான் வியாபாரி.



More papers at www.testpapersfree.com

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21 துணி வியாபாரி எப்படிப்பட்டவன்?

(1) அவன் எல்லோருக்கும் கொடுத்து உதவுவான்
(2) அவன் யாருக்கும் எதையும் தரமாட்டான்
(3) அவன் வேலைக்காரர்களுக்கு மட்டும் உதவுவான்
(4) அவன் ஊர் மக்களுக்கு மட்டும் உதவுவான்

Q22 ஒட்டகம் ஏன் கீழே விழுந்தது?

(1) மழை பெய்ததால் வழுக்கி விழுந்தது
(2) வெகுதூரம் நடந்ததால் களைப்படைந்து விழுந்தது
(3) கனமான துணிபெட்டிகளைத் தூக்கமுடியாததால் விழுந்தது
(4) துணி பெட்டிகளைத் தூக்கியதால் களைப்படைந்து விழுந்தது

Q23 வியாபாரி பயணத்தை எவ்வாறு தொடர நினைத்தான்?

(1) துணிபெட்டிகளை இரண்டு ஒட்டகங்களில் ஏற்றி
(2) துணிகளைப் பெட்டிகளின்மீது போர்த்தி
(3) பக்கத்து ஊருக்குச் சென்று
(4) இரு வேலைக்காரர்களுடன் ஒட்டகத்தின் மீது அமர்ந்து

Q24 வேலைக்காரர்கள் எதனால் பெட்டிகளைப் போர்த்தினர்?

(1) துணிகள் விலையுயர்ந்தது என்பதால்
(2) வியாபாரி பக்கத்து ஊருக்குச் சென்றதால்
(3) துணிகள் நனையாமல் இருக்க வேண்டும் என்பதால்
(4) பெட்டிகளை நனையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதால்



More papers at www.testpapersfree.com

## சொற்பொருள்

**Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(2 மதிப்பெண்கள்)**

Q25 அமர்த்தியிருந்தான்

(1) வைத்திருந்தான்
(2) நியமித்திருந்தான்
(3) கொடுத்திருந்தான்
(4) தேர்ந்தெடுத்திருந்தான்



More papers at www.testpapersfree.com

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

Q26 தோட்ட வேலை செய்வது தாத்தாவின் பொழுதுபோக்கு. சென்ற ஞாயிற்றுக்கிழமை அவர் செடிகளைச் சுற்றி வளர்ந்துள்ள ______________ பிடுங்கி வீசிக்கொண்டிருந்தார். Q26 (   )

Q27 சமூக மன்றம் தமிழர் பண்பாட்டு முகாம் ஒன்றை ஏற்பாடு செய்தது. அதில் ______________ அடித்தல் விளையாட்டு சிறுவர்களை மிகவும் கவர்ந்தது. Q27 (   )

Q28 திரு அக்பர் ஒரு சிறந்த ஆசிரியர். அவர் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் பாடங்களை __________ கூறுவார். Q28 (   )

Q29 காந்தி அடிகள் பல நற்பழக்கங்களைப் பின்பற்றி வந்தார். அதில் ஒன்று ______________ உண்ணாமல் இருத்தல். Q29 (   )

| | | | |
|---|---|---|---|
| (1) | கலைகளை | (2) | விளக்கி |
| (3) | ஊன் | (4) | உறி |
| (5) | உரி | (6) | ஊண் |
| (7) | களைகளை | (8) | விலக்கி |


மதிப்பெண்கள் :



More papers at www.testpapersfree.com

<u>D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :**




# விலங்கியல் தோட்டத்தில் சிறுவர் தினக் கொண்டாட்டம்



நாள் : 1 அக்டோபர் 2016, சனிக்கிழமை

நேரம் : காலை 10 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை

இடம் : விலங்கியல் தோட்டம்

கட்டணம்: 3 முதல் 12 வயது வரையிலான பிள்ளைகளுக்கு நுழைவுக் கட்டணம் இல்லை.
உடன்வரும் ஒவ்வொருவரும் பத்து வெள்ளி செலுத்தினால் போதும்.

***அழகே! அழகே!***

*உங்களுக்கு விருப்பமான பிராணியுடன் இலவசமாகப் புகைப்படம் எடுக்கலாம்.*

*நேரம்: பிற்பகல் 2.30 முதல் 3.30 வரை*

*இடம்: நுழைவாயிலின் பக்கத்தில் உள்ள திறந்த வெளி அரங்கம்*



*நேரம் : காலை 10.30 முதல் 12.30 வரை*
*இடம் : நுழைவாயிலின் பக்கத்தில் உள்ள திறந்த வெளி அரங்கம்*

<u>வண்ணம் தீட்டும் போட்டி</u>

**5 முதல் 7 வயது வரை**
ஐந்து சிறந்த படைப்புகளுக்கு விலங்குகளைப் பற்றிய கதை புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

<u>ஓவியப் போட்டி</u>

**8 முதல் 10 வயது வரை**
*விலங்குகளை வரைந்து வண்ணம் தீட்டுதல்*
**11 முதல் 12 வயது வரை**
விலங்குத் தோட்டச் சுற்றுச்சூழலைப் படமாக வரைதல்

**முதல் பரிசு: $200 ரொக்கம்**

**இரண்டாம் பரிசு: $150 ரொக்கம்**

அன்று விலங்கியல் தோட்டத்துக்கு வரும் அனைத்து சிறுவர்களுக்கும் ஓர் அன்பளிப்புப் பை வழங்கப்படும்.

***போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் விரைந்து <u>www.singaporezoo.org.sg</u> என்னும் இணையப்பக்கத்தில் பதிவு செய்யுங்கள்!***
***மேல் விவரங்களுக்கு உடனே குமாரி லில்லியை (65) 6269 3411 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.***



More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. யார் நுழைவுக் கட்டணம் கட்டத் தேவையில்லை? (2 மதிப்பெண்கள்)

(1) 8 வயது பிள்ளைகளுடன் வரும் பெற்றோர்
(2) 12 வயதுக்குக் கீழ் உள்ள பிள்ளைகள்
(3) 12 வயதுக்கு மேல் உள்ள பிள்ளைகள்
(4) பிள்ளைகளுடன் வரும் பெற்றோர் ( )

Q31 கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும் சிறுவர்கள் எவற்றை எதிர்பார்க்கலாம்? (2 மதிப்பெண்கள்)

(1) கட்டணக் கழிவும் அன்பளிப்புப் பையும்
(2) அன்பளிப்புப் பையும் கதைப்புத்தகங்களும்
(3) கட்டணக் கழிவும் மிருகங்களுடன் இலவசமாகப் புகைப்படமும்
(4) அன்பளிப்புப் பையும் மிருகங்களுடன் இலவசமாகப் புகைப்படமும் ( )

Q32 கொண்டாட்டத்தைப்பற்றித் தகவல் அறிய விரும்புபவர்கள் என்ன செய்யவேண்டும்? (2 மதிப்பெண்கள்)

(1) நேரடியாக வர வேண்டும்
(2) இணையப்பக்கத்தில் பதிவு செய்ய வேண்டும்
(3) தொலைபேசியில் தொடர்புகொள்ள வேண்டும்
(4) இணையத்தின்வழி தொடர்புகொள்ள வேண்டும். ( )

Q33 ஓவியப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பிள்ளைகளின் பெற்றோர் எத்தகைய விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்? (4 மதிப்பெண்கள்)

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________

மதிப்பெண்கள் :



More papers at www.testpapersfree.com

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

சுவாமி விவேகானந்தர் ஒரு பெரிய மகான். அவர் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர் மட்டுமின்றி நல்ல உடற்கட்டும் கொண்டவர். ஆனாலும், அவர் தன்னுடைய படிப்பறிவையும் உடல் பலத்தையும் வெளியே காட்டாது எப்பொழுதும் அமைதியாகவே இருப்பார்.

ஒருநாள் அவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய இருக்கைக்கு எதிரே இரண்டு ஆங்கிலேயர்கள் ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் விவேகானந்தரை ஏளனமாகப் பார்த்துச் சிரித்தனர். அவருடைய எளிமையான காவி உடையைப் பற்றித் தங்களுக்குள் தரக்குறைவாகப் பேசிக்கொண்டனர். ஆங்கிலேயர்கள் இருவரும் ஆங்கில மொழியில் பேசிக்கொண்டது விவேகானந்தருக்குப் புரிந்தாலும் அவர் எதுவும் கூறாமல் அடக்கமாகவே இருந்தார்.

சிறிது நேரங்கழித்து விவேகானந்தர் கழிவறைக்குச் சென்றார். அவர் திரும்பி வருவதற்குள், அவ்விரு ஆங்கிலேயர்களும் அவரது பெட்டிகளை ரயிலுக்கு வெளியே எறிந்து விட்டனர். அவர் பெட்டிகளைக் காணாது திகைத்தபோது, "உன் பெட்டிகள் காற்று வாங்க வெளியே சென்றிருக்கின்றன," என்றனர். கேலியான அப்பதிலைக் கேட்டபொழுதும் அவர் பொறுமையாகவே இருந்தார்.

ரயில் ஓரிடத்தை அடைந்தபோது ஆங்கிலேயர்கள் இருவரும் கழிவறைக்குச் சென்றனர். அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட இதுதான் நல்ல சமயம் என நினைத்த விவேகானந்தர் அவர்களின் பெட்டிகளை ரயிலுக்கு வெளியே வீசினார். திரும்பி வந்த அவர்கள் தங்கள் பெட்டிகளைக் காணாது கோபம் அடைந்தனர். "எங்கள் பெட்டிகள் எங்கே?" என விவேகானந்தரை மிரட்டினர். அதற்கு விவேகானந்தர், "காற்று வாங்கச் சென்ற என் பெட்டிகள் இன்னும் வரவில்லையல்லவா? அதனால் அவற்றைத் தேட உங்கள் பெட்டிகளை அனுப்பியிருக்கிறேன்," என்று ஆங்கிலத்தில் சூடாகப் பதிலளித்தார்.



More papers at www.testpapersfree.com

அவர் ஆங்கிலத்தில் பேசியதைக் கேட்ட அவ்விருவரும் திகைத்து, அவரை அடிப்பதற்கு நெருங்கினர். அதற்கு விவேகானந்தர், "என்னுடன் சண்டையிடுவதற்கு உங்களுக்கு ஆசை என்றால் நானும் தயார்," என்று தன் கையை ஓங்கினார். அவருடைய வலிமையான உடலையும் வீரம் பொருந்திய முகத்தையும் கண்ட ஆங்கிலேயர்கள் நடுங்கி ஓரடி பின்வாங்கினர். அப்பொழுதுதான் அடக்கமாகவே இருந்த சுவாமி விவேகானந்தரை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டனர்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.** **(22 மதிப்பெண்கள்)**

Q34. சுவாமி விவேகானந்தரிடம் காணப்பட்ட நற்குணம் என்ன?

(2 மதிப்பெண்கள்)

Q35. ஆங்கிலேயர்கள் ஏன் சுவாமி விவேகானந்தரைக் கேவலமாகப் பார்த்தனர்?

(3 மதிப்பெண்கள்)

மதிப்பெண்கள் :



More papers at www.testpapersfree.com

Q36. விவேகானந்தர் இல்லாதபோது ஆங்கிலேயர்கள் என்ன செய்தனர்?
(3 மதிப்பெண்கள்)

Q37. விவேகானந்தர் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பேசாததன் காரணம் என்ன?
(3 மதிப்பெண்கள்)

Q38. விவேகானந்தர் எவ்வாறு ஆங்கிலேயர்களுக்குப் புத்தி புகட்டினார் ?
(4 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

Q39. ஆங்கிலேயர்கள் இறுதியில் ஏன் தயங்கி நின்றனர்? (3 மதிப்பெண்கள்)

Q40. விவேகானந்தர் அமைதியும் பொறுமையும் மிக்கவர் என்பதைச் சுட்டிக்காட்டும் இரண்டு சம்பவத்தைப்பற்றி நீ உன் நண்பனுக்குக் குறிப்பு எழுது.
(4 மதிப்பெண்கள்)

அன்புள்ள சிவா,

இப்படிக்கு,

உன் நண்பன்

மதிப்பெண்கள் :

முற்றும்



More papers at www.testpapersfree.com

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE

ANSWER KEY

வேற்றுமை

Q1 2
Q2 1
Q3 3
Q4 4
Q5 1

செய்யுள்

Q6 2
Q7 3
Q8 4
Q9 1
Q10 3

அடைமொழி\எச்சம்

Q11 2
Q12 1
Q13 4
Q14 2
Q15 3

முன்னுணர்வு

Q16 3
Q17 2
Q18 3
Q19 1
Q20 4



More papers at www.testpapersfree.com

<u>தெரிவுவிடை கரு.</u>

Q21 2
Q22 3
Q23 1
Q24 4
Q25 2

<u>ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>

Q26 7

Q27 4

Q28 2

Q29 3

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

Q30 2

Q31 4

Q32 3

Q33 ஓவியப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும் (1) .8 முதல் 10 வயது வரையிலான சிறுவர்கள் விலங்குகளை வரைந்து வண்ணம் தீட்ட வேண்டும் 11 முதல் 12 வயது வரையிலான சிறுவர்கள் விலங்குத் தோட்டச் சுற்றுச்சூழலைப் படமாக வரைய வேண்டும் (1).மேலும் இப்போட்டி அக்டோபர் முதல் தேதி காலை 10.30முதல் 12.30 வரை திறந்த வெளி அரங்கில் நடைபெறும் இவையே (1).ஓவியப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பிள்ளைகளின் பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் ஆகும்3-கருத்து) ., மொழி (1-

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

Q34 சுவாமி விவேகானந்தர் தன்னுடைய படிப்பறிவையும் உடல் வலிமையையும் வெளியே காட்டாது எப்பொழுதும் அமைதியாகவே இருப்பார்.
1-கருத்து), மொழி1-)

Q35 ஆங்கிலேயர்கள் ஆடம்பரமான உடை அணிந்திருந்தனர்ஆனால் (1) . விவேகான்ந்தர்எளிமையான காவி உடை உடுத்திருந்தார் அதனால் (1) . ஆங்கிலேயர்கள் சுவாமி விவேகானந்தரைக் கேவலமாகப் பார்த்தனர் .

2-கருத்து), மொழி1-)



More papers at www.testpapersfree.com

Q36 .விவேகானந்தர் கழிவறைக்குச் சென்று திரும்பி வருவதற்குள், (1) ஆங்கிலேயர்கள் அவரது பெட்டிகளை ரயிலுக்கு வெளியே தூக்கி எறிந்து விட்டனர் (1).இவ்வாறு விவேகானந்தரின் பெட்டிகள் காணாமல் போயின . 2-கருத்து), மொழி1-)

Q37 விவேகானந்தர் தம் பெட்டிகளைக் காணாது திகைத்தபோது, அவர் பெட்டிகள் காற்று வாங்க வெளியே சென்றிருப்பதாக ஆங்கிலேயர்கள் கேலியாகப் பதில் கூறினர்(1). அதைக் கேட்டுக் கோபம் கொண்டாலும் அவர் பொறுமையைக் கடைபிடிக்க ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பேசகாமல் இருந்தார்2-கருத்து) ., மொழி1-)

Q38 ஆங்கிலேயர்கள் இருவரும் கழிவறைக்குச் சென்றபோது விவேகானந்தர் அவர்களின் பெட்டிகளை ரயிலுக்கு வெளியே வீசினார்(1). திரும்பி வந்த அவர்கள் தங்கள் பெட்டிகளைக் காணாது கோபம் அடைந்து அவர்கள் பெட்டிகள் எங்கே? என கேட்டு விவேகானந்தரை மிரட்டினர்(1). அதற்கு விவேகானந்தர், அவை காற்று வாங்கச் சென்ற தன் பெட்டிகளைத் தேடச் சென்றிருப்பதாக ஆங்கிலத்தில் கோபமாகப் பதிலளித்தார்(1). இவ்வாறு விவேகானந்தர் ஆங்கிலேயர்களுக்குப் புத்திப் புகட்டினார். 3-கருத்து), மொழி1-)

Q39 விவேகனந்தர் ஆங்கிலத்தில் பேசியதைக் கேட்ட ஆங்கில்லேயர்கள் திகைத்து, அவரை அடிக்கச் சென்றனர் அதைக் கண்ட விவேகானந்தரும் (1). அவர்களுடன் சண்டையிட தானும் தயார் என்று கூறி தன் கையை ஓங்கினார் . (1) அவருடைய வலிமையான உடலையும் வீரம் பொருந்திய முகத்தையும் கண்ட ஆங்கிலேயர்கள் பயந்து தயங்கி நின்றனர்2-கருத்து) ., மொழி1-)

Q40 எளிமையான காவி உடை அணிந்திருந்த விவேகானந்தரை ஆங்கிலேயர்கள் ஏளனமாகப் பார்த்துச் சிரித்ததோடு அவரைப் பற்றித் தங்களுக்குள் தரக்குறைவாக ஆங்கிலத்தில் பேசினர்.(1) ஆங்கில மொழி விவேகானந்தருக்குப் புரிந்தாலும் அவர் எதுவும் கூறாமல் அடக்கமாகவே இருந்தார்.(1) மேலும் விவேகானந்தர் தம் பெட்டிகளைக் காணாது திகைத்தபோது, அவர் பெட்டிகள் காற்று வாங்க வெளியே சென்றிருப்பதாக ஆங்கிலேயர்கள் கேலியாகப் பதில் கூறியதைக் கேட்டுக் கோபம் கொண்டாலும் அவர் பொறுமையைக் கடைபிடித்தார்.(1) இச்சம்பவங்களிலிருந்து விவேகானந்தர் அமைதியும் பொறுமையும் மிக்கவர் என்பதை அறியலாம். -கருத்து)3, மொழி1-)



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com